பாடம் 3

# வேதாகமத்தில் நீங்கள் விரும்புவதை எவ்வாறு கண்டுபிடிப்பது

பாட்டியின் சமையல் அறையிலிருந்து ஒன்றையும் கண்டுபிடிக்க முடியாது. சக்கரை என்று எழுதப்பட்டிருக்கிற டப்பாவில் மாவு இருக்கும், உப்பு என்று எழுதப் பட்டிருக்கிற டப்பாவில் தேயிலை இருக்கும். பாட்டியின் சிறு சமையல் அறையில் அவர் தானே வேலை செய்ததால் அவர்கள் அதை பொருட்படுத்துவதில்லை.

ஆனால் தெருவிற்கு அப்புறமுள்ள வீட்டை கவனித்தால் வித்தியாசமான சமையல் அறை இருக்கிறது. எல்லாவற்றிற்கும் சரியான பெயர் கொடுக்கப்பட்டு ஒட்டப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தாய் மட்டுமல்ல அவ்வறையில் வேலை செய்வது அவருடைய புருஷன் காலையில் தன் விருப்பத்திற்கிணங்க உணவு தயாரிக்கிறார். பிள்ளைகள் இரவு உணவு தயாரிக்கிறார்கள். ஒவ்வொரு உணவு நேரத்திலும் திட்டமிட்டு வேலை செய்கிறார்கள்.

வேதாகமும், நமக்கு தேவையானவற்றை கண்டு பிடிப்பதற்கு ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்தை வெளியிடுகிறவர்கள் இதை அறிந்திருக்கிறார்கள். எந்த மொழிபெயர்ப்பானாலும் அதிகாரங்கள் வசனங்கள் தேவையோடு பார்க்கிறவர்கள் தவறமல் இருக்க ஒன்றுபோல அமைக்கப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில் தேவைப்படும் வசனங்களை எளிதில் கண்டுபிடிக்க அகராதி போன்ற புத்தகங்கள் வெளியிடப் பட்டுள்ளது. வேதாகமம் வசனங்களை எப்படி சொல்வது எப்படி எழுதுவது என்று இந்த பாடத்தில் படிக்கலாம். அதோடு பாடங்கள் படிக்க எப்படி வழிகாட்டும் என்றும் தேடுகிற வசனத்தை எப்படி கண்டுபிடிக்க முடியும் என்றும் படிக்கலாம்.




இந்த பாடத்தில் நீங்கள் படிப்பவை,
வேதாகம குறிப்பு,
பாட குறிப்பு,
ஒத்து வாக்கியம்.

இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* எந்த வேதாகம குறிப்பையும் எழுத, சொல்ல, கண்டுபிடிக்க.

* பக்க விலக்கு இடத்தில் அமைந்துள்ள குறிப்பையும், ஒத்து வாக்கியத்தையும் எப்படி கண்டு பிடிப்பது என்று விளக்க.

## வேதாகம குறிப்பு

### சொல்லும்விதம் எழுதும்விதம்

*உட்கருத்து 1* எந்த வேதாகம குறிப்பையும் சரியாக சொல்லவும், எழுதவும் செய்வது.

படிப்பதற்கும், வாசிப்பதற்கும் உதவியாக வேதாகமத்தின் எல்லா புத்தகங்களும் அதிகாரங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அதிகாரமும் சிறு சிறு வசனங்களாக பிரிக்கப்பட்டு இடது பக்கம் எண் போடப்பட்டிருக்கிறது. வேதாகமத்தின் எந்த ஒரு வசனத்தையும் எடுக்க முதலாவது புத்தகத்தின் பெயர், இரண்டாவது அதிகாரத்தின் எண் மூன்றுவது வசனத்தின் எண் இவைகளை சொல்லுகிறோம். இவைகள் எல்லாம் சேர்ந்து தான் வேதாகம குறிப்பு என்று பெயர்.

வேதாகமத்தின் முதலாவது புத்தகமாகிய ஆதியாகமத்தை பார்க்கலாம். சில மொழி பெயர்ப்புகளில் முகவுரை கொடுக்கப்பட்டிருந்தால் அதை விட்டு விட்டு ஒன்று என்று அதிகாரத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணை பாருங்கள். முதலாவது அதிகாரத்தின் முதலாவது வசனம் எண் 1 என்று கீழ்கண்டவாறு ஆரம்பிக்கிறது. ''ஆதியிலே தேவன் ...'' இந்த வசனத்தை குறிப்பதற்கு நாம் ''ஆதியாகமம் ஒன்று, ஒன்று'' என்று கூறுகிறோம். அதிகாரத்தின் கீழ் ஆரம்பிக்கும் வசனங்களின் எண்கள் அதிகாரம் முடியும் வரை இருப்பதை கவனிக்கிறோம்.

இப்போது 2 என்ற அடுத்த பெரிய எண்ணை பாருங்கள். முதலாவது வசனம் ''இவ்விதமாக வனமும் பூமியும்...'' என்று ஆரம்பிக்கிறது. இந்த வசனத்தை குறிப்பதற்கு நாம் ''ஆதியாகமம் இரண்டு, ஒன்று'' என்று சொல்லுகிறோம். இரண்டாம் அதிகாரத்திற்கு 25 வசனங்கள் உண்டு.

இப்போது ஆதியாகமம் ஐந்து, ஒன்றுக்கு வாருங்கள். அது ''ஆதாமின் வம்சவரலாறு...'' என்று ஆரம்பிக்கிறது. வேதாகம குறிப்பு ஒன்றை நாம் கொடுக்கும்போது அதிகாரம் வசனம் என்று சொல்லவேண்டுவதில்லை. அதைக் குறிக்கிற எண்களை மட்டும் சொன்னால் போதும்.

ஆதியாகமம் 5:1-5 என்றால் எப்படி? நீங்கள் சரியாக சொல்லியிருந்திருக்கலாம். ''ஆதியாகமம் ஐந்து, ஒன்று முதல் ஐந்து'' இடையிலே ஒரு கோடு இருந்தால் வசனங்

களையும் அதிகாரங்களையும் பிரித்துகாட்டுகிறது. ஒரே அதிகாரத்தில் பல வசனங்களை நாம் குறிக்கிறோம் என்றால் கீழ்கண்டவாறு குறிக்கலாம் யோசுவா 1:5, 8, 10. அதை ''யோசுவா ஒன்று, ஐந்து, எட்டு, பத்து'' என்று சொல்லுகிறோம்.

ஒரே புத்தகத்திலுள்ள வித்தியாசமான அதிகாரங்களிலிருந்து வசனங்களை குறிக்கிறோம் என்றால் குறிப்பிற்கிடையில் அரைப்புள்ளி ஒன்று இட்டு பிரிக்கலாம். மத்தேயு 1:21; 2:1-6 ஒன்றும் அதிகாரம் இருப்பத்து ஒன்றும் வசனமும் இரண்டாம் அதிகாரம் ஒன்று முதல் ஆறு வசனங்களை குறிக்கும்.

1 இராஜாக்கள் 2 இராஜாக்கள் போன்ற சில புத்தகங்கள் ஒரே பெயரில் ஒன்றின் பின் ஒன்று வரும். யோவான் என்ற எழுத்தாளர் தன்னுடைய பெயரில் மூன்று நிருபங்களை எழுதியுள்ளான். அவைகள் 1 யோவான், 2 யோவான், 3 யோவான் என்று வரும். இந்த புத்தகங்களில் ஒன்றின் குறிப்பை (ஒன்று யோவான் ஒன்றும் அதிகாரம், ஒன்பதாம் வசனம்) 1 யோவான் 1:9 என்று எழுதலாம்.

கற்றுக் கொள்வதற்கு எளிதான இந்த முறையை விளங்கியிருப்பீர்களென்று நான் எண்ணுகிறேன். தொடர்ந்து படிக்க இவைகள் அதிகமாய் உதவி செய்யும்.



## நீங்கள் செய்ய வேண்டியது

*1.* கீழ்க்காணும் கட்டங்களில் விடப்பட்டிருக்கும் தகவல்களை நிரப்புங்கள்.

| | குறிப்பு | எப்படி சொல்லப்படுகிறது |
|---|---|---|
| a) | யோவான் *3:16* | |
| b) | | ரோமர் ஆறு, இருப்பத்து மூன்று |
| c) | *1* யோவான் *1:8-10* | |
| d• | | ரோமர் பனிரண்டு, பதினான்கு, பதினாறு, பதினெட்டு. |
| e) | | மத்தேயு ஒன்று, ஒன்று; ஐந்து ஒன்றுமுதல் மூன்று |

2. மத்தேயு *1:1-4*, மத்தேயுவிலுள்ள முதல் நான்கு வசனங்களை இது குறிப்பிடுகிறது. கீழ் கண்ட குறிப்புகளில் எத்தனை வசனங்கள் இருக்கிறது?

a) ஆதியாகமம் *8:18-22*ல் ................
b) ஆதியாகமம் *8:18, 22*ல்.................

3. மத்தேயு 1:21; 2:1; 3:13, 16 வசனங்களை கண்டு பிடித்து எவைகளைப்பற்றிய வசனங்கள் என்று குறிப் பிடவும்?

a) இயேசு, சாஸ்திரிகள், யோவான் ஸ்நானகன், சீஷர்கள்
b) இயேசு, சாஸ்திரிகள் யோவான் ஸ்நானகன், பரிசுத்த ஆவி
c) இயேசு, யோசேப்பு, மேய்ப்பர்கள்

## குறிப்புகளைக் கண்டு பிடித்தல்

உட்கருத்து 2 எந்த வேதாகம குறிப்பையும் கண்டு பிடிப்பது.

ஒரு நாளில் ஒரு வேதபாட கூட்டத்தில் ஜெபம் முடிந்த பின் புது விசுவாசி ஒருவர் ''நீங்கள் மிக அறிவுள்ளவர், எவ்வளவு சீக்கிரமாய் வேதாகம வசனங் களை எடுத்து விடுகிறீர்கள்'' என்று கேட்டார். வேதாகம வசனங்களை சீக்கிரமாய் எடுப்பது ஒரு பெரிய அறிவல்ல. நீங்கள் இப்பாடத்தில் கற்க போவதை அவன் கற்று கொண்டிருக்கிறான் என்பதுதான் காரியம்.

உங்கள் வேதாகமத்தின் ஆரம்பத்தில் ஒரு பக்கத் தில் எல்லா புத்தகங்களின் பெயர்களும் எண்களும் எங்கிருந்து அந்த புத்தகம் ஆரம்பிக்கிறது என்றும் கொடுக்கப்பட்டிருக்கும்.

எப்படியும், வேதாகம குறிப்புகளை எளிதில் கண்டு பிடிக்க வேதாகம புத்தகங்களின் பெயர்களை வரிசையாக மனப்பாடம் செய்தல் ஒரு நல்ல முறையாகும். பிள்ளைகள் சீக்கிரமாக படித்துவிடுகிறார்கள். பெரியவர்களும் படிக்க லாம் ஒவ்வொரு நாளும் ஐந்து அல்லது ஆறு புத்தகங் களின் பெயர்களை வரிசையாக ஒன்றின் பின் ஒன்றாக சொல்லி சொல்லி படிக்கலாம். ஒரு சிறு அட்டையில் எழுதி வைத்து நீங்கள் போகிற இடங்களிலெல்லாம் கொண்டு சென்றால், சீக்கிரமாக மனப்பாடம் செய்து விடலாம். இப்படி செய்தால் வேதாகமத்தின் எந்த ஒரு புத்தகத்தின் பகுதியையும் மிக எளிதாக திருப்பி கண்டு பிடிப்பதை கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

## நீங்கள் செய்ய வேண்டியது

4. இடது பக்கம் இருக்கிற வேதாகம குறிப்புகளை பார்த்து வலது பக்கம் இருக்கிற வசனங்களோடு சரியாக இணையுங்கள்.

...a) *பிலிப்பியர் 4:19*
...b) *1 யோவான் 1:8*
...c) *யோசுவா 1:9*
...d) *சங்கீதம் 23:1*

*1) நான் உனக்கு கட்டளை இடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு*

*2) நமக்கு பாவம் இல்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.*

*3) கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.*

*4) என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்*

# ஒத்து வாக்கிய குறிப்பு

**உட்கருத்து 4 ஒத்து வாக்கிய குறிப்பை உபயோகிக்க வழிகளை அறிந்து கொள்ளுதல்.**

வேதாகமத்தில் காணப்படும் முக்கியமான வார்த்தைகளை அகர வரிசையில், அது இருக்கிற இடத்தின் குறிப்புகளோடு எழுதி காட்டுவது ஒத்துவாக்கிய குறிப்பு. குறிப்பிட்ட ஒரு வார்த்தை எந்த எந்த இடங்களிலெல்லாம் உபயோகமாக்கப்பட்டிருக்கிறது என்று இந்த ஒத்து வாக்கிய குறிப்பு கூறும்.

வேதத்தை வாசிக்கும்போது ஒத்துவாக்கிய குறிப்பு உபயோகமாக்க வேண்டிய சூழ்நிலை எழுந்து வரலாம். உதாரணமாக அன்பு என்ற வார்த்தை எந்தெந்த இடங்களில் இருக்கிறது என்று அறிய முயற்சிக்கிறோம் என்று வைத்து கொள்ளுங்கள். இந்த அன்பு என்ற வார்த்தையை ஒத்துவாக்கிய குறிப்பு எடுத்து அகர வரிசை முறைப்படி தேடி கண்டு பிடியுங்கள். அன்பு என்ற வார்த்தை வேதாகமத்தில் எங்கெங்கு உபயோகமாக்கப்பட்டிருக்கிறதோ அந்தந்த இடங்களிலுள்ள குறிப்புகளை இந்த ஒத்து வாக்கிய குறிப்பு கூறும்.

குறிப்பிட்ட சில வசனங்கள், வேதத்தின் எந்த பகுதியில் இருக்கிறது என்று கண்டு பிடிக்கக்கூட இந்த ஒத்து வாக்கிய குறிப்பு உதவும். ஒருவேளை ஒரு வசனத்தின் ஒரு சிறு பகுதிதான் உங்களுக்கு தெரியும். வசனம் முழுவதையும் அறிய விரும்புகிறீர்கள். அந்த வசனத்தில் அடங்கிய முக்கியமான வார்த்தை தெரிந்திருந்தால் அந்த வார்த்தைக்கு கீழ் இருக்கிற குறிப்புகளை கண்டுபிடித்து வசனத்தை முழுவதும் அறிய இந்த ஒத்துவாக்கிய குறிப்பு உதவும்.

உதாரணமாக பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது என்ற வசனத்தை கண்டுபிடிக்க விரும்புகிறீர்கள் ஆனால் இப்போது உங்கள் மனதில் இருக்கிற பகுதி ''எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது'' என்பது மட்டும்தான். இதில் அடங்கியிருக்கிற இரண்டு முக்கியமான வார்த்தைகளை கவனியுங்கள் ஒன்று ''தீமை'' இன்னொன்று ''வேர்'' அகர வரிசையில் 'தீமை' என்ற வார்த்தையை எடுத்து அதன் கீழ் இருக்கிற குறிப்புகளை பாருங்கள். 1 தீமோ 6:10 'பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது' என்று காணப்படும். 'தீமை' என்ற

வார்த்தையின் கீழ் கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் 'வேர்' என்ற வார்த்தையின் கீழாகிலும் கண்டுபிடிக்க முடியும்.

*1 தீமோத்தேயு 6:10*ல் சொல்லப்படும் வசனம் சில நேரங்களில் தவறாய் புரிந்து கொள்ளப்படுகிறது. அதற்கு பாடக்குறிப்பு அல்லது, ஒத்துவாக்கிய குறிப்பு தவறுகளை கண்டுபிடித்து திருத்துவதற்கு மிக உதவும்.

உங்களுடைய வேதாகமத்தில் பக்க விலக்கு பகுதி குறிப்பு அல்லது ஒத்துவாக்கிய குறிப்பு இருக்கிறதா? இவைகள் வேதாகமத்தோடு இணைத்திராவிட்டாலும் தனி புத்தகங்களாகக்கூட கிடைக்கும் தேவனுடைய வேலையில் ஈடுபடுகிற ஆசிரியர்களுக்கு, பிரசங்கியார் களுக்கு இவைகள் மிக முக்கியமாக தேவைப்படுகிறது. ஒருவேளை நீங்கள் ஆசிரியராகவோ, பிரசங்கியாராகவோ மாற விரும்பாமல் இருக்கலாம், ஆனாலும் வேதத்தை நன்றாக கற்றுக்கொள்ள இந்த பாடக்குறிப்புகள் அல்லது ஒத்து வாக்கிய குறிப்புகள் உபயோகமாகும். இவைகளின் உதவியால் வேத வசனங்களோடு அதிகமாய் தொடர்பு கொள்ளலாம்; தேவனோடும், மற்றவர்களோடும் உள்ள தொடர்பை அதிகமாய் கற்றுக்கொள்ளலாம்.

## நீங்கள் செய்ய வேண்டியது

5. கீழ்கண்டவற்றில் எந்த இரண்டு வாக்கு மூலங்கள் சரியானவைகள்.
   a) வேதாகமத்தின் முக்கியமான வார்த்தைகளை அகர வரிசையில் கொடுக்கப்பட்டிருப்பது ஒத்துவாக்கிய குறிப்பு.
   b) ஒத்துவாக்கிய குறிப்பு ஆசிரியர்களுக்கும் பிரசங்கிமார்களுக்கும் மட்டும்தான்.
   c) வேத வசனத்தின் ஒரு சிறு பகுதியை மனதில் கொண்டிருந்தாலும் மீதி வசனத்தை கண்டுபிடிக்க உதவுவது ஒத்துவாக்கிய

குறிப்பு.

d) ஒத்து வாக்கிய குறிப்பும், பக்க விலக்கு பகுதி குறிப்பும் ஒன்றுதான்.

விடைகளை சரிபாருங்கள்

1. a) யோவான் மூன்று, பதினாறு.
   b) ரோமர் 6:23
   c) ஒன்று யோவான் ஒன்று, எட்டு முதல் பத்து
   d) ரோமர் 12:14, 16, 18.
   e) மத்தேயு 1:1:5:1-3

2. a) ஐந்து
   b) இரண்டு

3. b) இயேசு, சாஸ்திரிகள், யோவான்ஸ்நானகன், பரிசுத்தாவி

5. a) சரி
   c) சரி

4. a 4) ''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படி...
   b 2) " நமக்கு பாவம் இல்லை என்போமானால்..''
   c 1) ''நான் உனக்கு கட்டளையிடவில்லையா?...''
   d 3) ''கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்...''